## October 14, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பொருளாதாரத்துக்கான நோபல் நினைவுப் பரிசு அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் பேராசிரியர்கள் மூவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
   i. நோபல் பரிசுப் பெறுவோரைத் தேர்வு செய்யும் ராயல் ஸ்வீடிஷ் அறிவியல் அகாதெமி, நிகழாண்டு பொருளாதாரத்துக்கான நோபல் நினைவுப் பரிசு பெறுவோரை ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் அறிவித்தது. இதன்படி, அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணம் இவான்ஸ்டன் நகரில் உள்ள நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோயல் மோகிர் (79), அந்நாட்டின் ரோட் ஐலண்ட் மாகாணம் பிராவிடன்ஸ் நகரில் உள்ள பிரௌன் பல்கலைக்கழகப் பேராசிரியர் பீட்டர் ஹோவிட் (79), பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் உள்ள காலேஜ் டி பிரான்ஸ் கல்லூரிப் பேராசிரியர் ஃபிலிப் அகியோன் (69) ஆகிய மூவருக்குப் பொருளாதாரத்துக்கான நோபல் நினைவுப் பரிசு அறிவிக்கப்பட்டது.
   ii. பொருளாதாரத்தில் மேலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கு புதிய வழிமுறைகளும் சிந்தனைகளும் எவ்வாறு ஊக்கமளிக்கும் என்பது குறித்து ஜோயல், பீட்டர், ஃபிலிப் ஆகியோர் விளக்கம் அளித்துள்ளனர். புதிய சிந்தனைகள், பொருள்கள், சேவைகள், நடைமுறைகளால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி குறித்து விளக்கியதற்காக அவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.
   iii. மூவருக்கும் நோபல் பரிசுடன் 11 மில்லியன் ஸ்வீடிஷ் கிரோனர் (சுமார் ரூ.10 கோடி) வழங்கப்படும். பரிசுத் தொகையில் ஒரு பாதி ஜோயலுக்கு வழங்கப்படும். மீதி பாதி தொகை பீட்டர் மற்றும் ஃபிலிப்புக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
   iv. நோபல் பரிசு உருவாகக் காரணமாக ஸ்வீடனின் ஆல்ஃபிரட் நோபல் நினைவாக பொருளாதாரத்துக்கான நோபல் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. அது, ஆல்ஃபிரட் நோபலின் நினைவாக பொருளாதார அறிவியலுக்கு வழங்கப்படும் பாங்க் ஆஃப் ஸ்வீடன் பரிசு என்று அதிகாரபூர்வ மாக அழைக்கப்படுகிறது.
2. தமிழ்நாட்டில் ரூ.15 ஆயிரம் கோடி அளவுக்கு முதலீடு செய்ய ஃபாக்ஸ்கான் நிறுவனம் முடிவு செய்துள்ளது.
   i. இதன்மூலம் 14,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார். இதை எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.
   ii. இதனிடையே, முதலீடுகளை உறுதி செய்யும் வகையில் ஃபாக்ஸ்கான் இந்தியா நிறுவனத்தின் பிரதிநிதி ராபர்ட்யூ முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் முதலீட்டு வாய்ப்புகளுக்கு முதல்வர் வரவேற்பு தெரிவித்துள்ளார்.
3. உலகளவில், மருத்துவமனைகளில் நோய்த்தடுப்பு மருந்துகளை (ஆன்டிபயாடிக்) தீநுண்மிகள் எதிர்ப்பது அபாயகரமான அளவில் உயர்ந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.
   i. 2023-ல் ஆய்வகத்தில் உறுதிப்படுத்தப்பட்ட ஆறு தீநுண்மிகளில் ஒன்று, ஆன்டிபயாடிக் சிகிச்சைக்கு எதிர்ப்பு காட்டுகிறது. 2018-23 காலகட்டத்தில், 40 சதவீத ஆன்டிபயாடிக் மருந்துகளை எதிர்க்கும் திறனை தீநுண்மிகள் பெற்றுள்ளன.
   ii. குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் இந்த நிலை இன்னும் மோசமாக

உள்ளது. 2021-ல் 77 லட்சம் பேர் நோய்த்தொற்றுகளால் இறந்தனர்; இதில் 47.1 லட்சம் இறப்புகளுக்கு மருந்தை எதிர்க்கும் தீநுண்மியின் திறன் இருந்தது என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

4. ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற ஆர்எம்சி யுஏஇ கார்டிங் சாம்பியன்ஷிப்பில், மினிமேக்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற முதல் பெண் போட்டியாளர் என்ற சாதனையை இந்தியாவின் 10 வயது அட்டிகா மிர் படைத்தார்.
5. ஜப்பானில் நடைபெற்ற பிஎஸ்ஏ டூர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா சாம்பியன் ஆனார். பிஎஸ்ஏ டூர் போட்டிகளில் இது அவரின் 11-ஆவது சாம்பியன் பட்டமாகும்.
6. பிரதமர் மோடியை கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் பேசினார்.
   i. வர்த்தகம், முதலீடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, முக்கிய கனிமங்கள் உள்பட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேம் படுத்துவதற்கான செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
   ii. இந்தியா-கனடா ஒத்துழைப்பை மீண்டும் கட்டமைக்க வேண்டும்; அது இரு நாட்டுப் பிரதமர்கள் மற்றும் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய வேண்டும்' என்று வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.
   iii. கடந்த 2023-ஆம் ஆண்டு கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட சம்பவத்தில் இந்திய உளவாளிகளுக்குத் தொடர்பிருக்க வாய்ப்புள்ளதாக அந்நாட்டின் அப்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டினார். இதனால் இந்தியா-கனடா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.
   iv. பிரதமர் பதவியை ஜஸ்டின் ட்ரூடோ ராஜிநாமா செய்த பின்னர், கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி பதவி யேற்றார். இதைத் தொடர்ந்து இந்தியா-கனடா உறவில் ஏற்பட்ட விரிசலைச் சரிசெய் வதற்கான நடவடிக்கைகளை இரு நாடுகளும் முன்னெடுத்துள்ளன.
7. முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளக் கோரியும், அணையை செயலிழக்கச் செய்யக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீது பதிலளிக்க மத்திய அரசு, தமிழகம் மற்றும் கேரள அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.
8. உக்ரைனுடனான போரை ரஷியா விரைவில் முடிவுக்குக் கொண்டுவராவிட்டால், உக்ரைன் நீண்டகாலமாக கோரிவரும் டாமஹாக் ரக ஏவுகணைகளை அந்த நாட்டுக்கு அளிக்கப்படலாம் அமெரிக்க அதிபர் டொனால்ட்டிரம்ப் எச்சரித்துள்ளார்.
9. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-
   i. பி.டி. உஷா - இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர்
   ii. நீரஜ் சோப்ரா - ஈட்டி எறிதல் வீரர்.
   iii. மனு பாக்கர் - துப்பாக்கி சுடும் வீரர்
   iv. ஸ்வப்னில் குசேல் - துப்பாக்கி சுடும் வீரர்
   v. அமன் ஷெராவத்து - மல்யுத்த வீரர்
   vi. கே.கிருதிவாசன் - டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டி.சிஎஸ்) தலைமைச்செயல் அதிகாரி (சிஇஓ)